முருகப்பெருமான் துணை

**மகான் மாணிக்கவாசகர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

06.01.2023, வெள்ளிக்கிழமை

1. தன்னார்வத் தொண்டர்படையை
தரணியெங்கும் பெருக்கி நன்கு
மண்ணுலகை மீட்கும் வண்ணம்
மாதவசியாக வந்த அரங்கா
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது சிலை திங்கள்
வரங்களென இருபானீர் திகதி புகர்வாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 22ம் நாள் 06.01.2023, வெள்ளிக்கிழமை)
வழங்குவேன் மாணிக்கவாசகர் யானும்
3. யானும் உலகோர் பண்புற
உயர் ஞானமும் பெற அனுகூல ஆசி
ஞானதேசிகன் கேட்க உரைப்பேன்
ஞானிகளாம் முழுமைபெற்ற மகான்கள்
4. மகான்களின் நாமசெப பலமே
மனபக்குவம் புலனடக்கமென
வகையான வழிமுறை தந்தருளும்
வாழும் அவதார ஞானிகளை
5. ஞானிகளை கண்டு சேவிக்க
நாளும் கோளும் சாதகமாக
தானிவர்கட்கு நன்மை செய்யும்
தவநெறி முறையாக அனுதினம் பூசை
6. பூசைதனை ஞானிகள் பேரில்
புண்ணியமோடு இணைத்து செய்ய
நேசமுள்ள மகான்கள் தொடர்பு
நிலமதனில் ஆசியாக ஸ்பரிசமாக
7. ஆகவே கிட்டி நல்ல அனுபவம்
அனுகூலமாகும் எல்லாம் வெற்றியாக
செகத்தினில் இந்தவித அற்புதத்தை
சித்தியாக அருள வேண்டி
8. வேண்டியே அவதாரம் எடுத்து
வேலவன் சக்தியாக வாழும்
தொண்டும் தருமமும் நிறைந்த
துறையூரில் உள்ள பிரணவக் குடிலில்
9. குடிலில் அரங்கமகானை கண்டு
குருவேயென வணங்கித் தீட்சை
இடர்வெல்ல முதலில் ஏற்று
இனிவினை தொடரா வண்ணம்

10. வண்ணமுடன் சீடர்களாகத் தொடர்ந்து
வணங்கி செபதபம் செய்து
அண்ணலின் அன்னதான சேவையே
ஆக்கினை போக்கும் வழியென

11. வழியென ஏற்று தருமம்தனில் உதவி
வழிமொழிந்து உலகமெலாம் பரப்பிட
அழியாமை கூடி அனுகும் மக்கள்
அனைவருமே அரங்கன் வழி ஞானிகளாவர்
அனுகூல ஆசிமுற்றே

–சுபம்–